DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No. 158/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW13 | | | |
| Name | : | சண்முகவள்ளி | Age | : | 50 |
| W/o | : | கந்தசாமி | Occupation | : | ஆடு பராமரிப்பு |
| Village | : | உச்சிப்புளி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 13th day of February 2026.

**13.02.2026**

**(1 எதிரி மற்றும் வழக்கறிஞர் ஆஜர். 2ம் எதிரி குற்றம் அற்றுப்போய்விட்டது). (மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் கூடுதல் சாட்சி வரவழைக்கப்பட்டுள்ளார்).**

**முதல் விசாரணை**

நான் தற்போது சின்னசேலத்தில் குடியிருந்து ஆடு பராமரித்து வருகிறேன். எனது சொந்த ஊர் உச்சிப்புளி ஆகும். எனது அப்பாவின் பெயர் தனிக்கொடி. எனது அப்பா 2004ல் இறந்துவிட்டார். அதனால் பாகப்பிரிவினை செய்வதற்காக எனது தந்தையின் இறப்பு சான்றிதழ் தேவைப்பட்டதால் வழக்கறிஞரை நான் நியமனம் செய்து அந்த வழக்கறிஞர் கூறியதால் அந்த மனுவில் நான் கையொப்பம் செய்தேன். எனது தம்பி தான் எனது தந்தையின் இறப்பு சான்றிதழை பெற்றார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பிறப்பு சான்றிதழ் கோரும் படிவத்தில் என்னுடைய கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். **(அந்த பிறப்பு சான்றிதழ் கோரும் படிவம் (நகல்) அ.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நகல் குறியீடு செய்ய இயலாது என்று எதிரி வழக்கறிஞரால் ஆட்சேபணை செய்யப்பட்டது).**

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு சம்மந்தமாக யாரும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னிடம் இப்படி சொல்ல வேண்டும் என்று கூறியதால் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தம்பி இராமநாதபுரத்தில் தான் உள்ளார் என்றால் சரிதான். அவர் கையெழுத்திட்டதாக சொல்லப்படும் ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை நான் இன்று தான் நீதிமன்றத்தில் பார்த்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், போலீசார் கூறியதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரைண – இல்லை**

SUJITH

Digitally signed by SUJITH
Date: 2026.02.13 20:13:50 +0530